உ

ஸ்ரீவாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை சு. | 1918-ம் ஆ மேமீ | இதழ் ரு.

திருக்குறள் வியாசம்.

அ-ம் அதிகாரம்.

அன்புடைமை.

அன்புடைமையாவது மனைவி மக்கள் முதலிய தொடர்புடையாரிடத்துக் காதலுடையவனாதல். மனைவிமேல் அன்பில்லாவிடத்து ஒருவனுக்கு இல்லறம் இனிது நடைபெறாது. இல்லறம் இனிது நடப்பதும் பிறவுயிர்கள்மேல் அருள்பிறப்பதும் அன்பின் பயனாகும். ஆதலின் இல்வாழ்வானுக்கு அன்புடைமை இன்றியமையாதது என்க.

இவ்வன்பு எப்படிப்பட்டவராலும் மறைத்துவைக்க முடியாதது. காட்சியளவையால் அறியப்படாதாயினும் அனுமான அளவையால் வெளிப்பட்டுவிடும். முன் குண்டினபுரத்தில் தமயந்தியின் இரண்டாஞ் சுயம்வரத்தின் உண்மையை அறியவந்து பிறர் தெரிந்துகொள்ளாதவண்ணம் தன்னை மறைத்துநின்ற நளனது உறுதி, தன்மக்களைக் கண்ட வளவில் என்னாயிற்று. அவன் உள்ளம் உடைந்தது. கண்களில் ஊற்றுப்போல் நீர் பெருகிற்று.

அக்கண்ணீரே அவனது அன்புடைமையை வெளிப்படுத்திற்று. இங்ஙனம் 1. 'தம்மால் அன்புசெய்யப்பட்டாரது துன்பங்கண்டவிடத்தே, அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்ளேயிருக்கின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும் ஆதலால், அன்பிற்கும் பிறர் அறியாமல் அடைத்துவைக்கும் தாழ் உளதோ ?' இல்லையென்க.

ஆகவே அன்பின் சிறப்பு அறைதற்பாலதன்று, 2. 'அன்பில்லாதவர் பிறர்க்குப் பயன்படாமையால் எல்லாப் பொருளாலும் தமக்கே உரியராவர். அன்புடையவர் அவைகளால் மட்டுமன்றி, தம் உடம்பாலும் பிறர்க்கு உரியராவர்.' ஒரு சிறு புறுவின் உயிரைக் காத்தற்பொருட்டு, தன் உயிரையும் பொருட்படுத்தாது சிபி துலையேறினனன்றே! இந்திரன்பொருட்டுத் ததீசி தன் முதுகெலும்பைத் தந்தானன்றே! என்னே அன்பின் பெருமை! ஆதலினாற்றான், 3. 'பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்குவந்த நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்.' உடம்போடு கூடியல்லது அன்புசெய்யக் கூடாமையின், அது செய்தற்பொருட்டே இத்தொடர்ச்சி யுண்டாயிற்றென்க. ஆகவே இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமையன்றே! மேலும், 4. 'ஒருவருக்குத் தொடர்புடையார் மாட்டுச்செய்த அன்பானது அத்தன்மையால் பிறரிடத்தும் விருப்பமுடைமையைத் தரும்; அவ்விருப்பமுடைமைதான், இவனுக்குப் பகையும் அயலுமில்லையாய் யாவரும் நட்பினரென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்

---

1. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

2. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

3. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

4. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

பிணைத்தரும்' என்க. இங்ஙனம் அன்புடையார்க்கு யாவரும் நட்பினராதல் அவர் எல்லாப்பொருளையும் அடைதற்குக் காரணமாதலின் அதனை அளவிறந்த சிறப்பென்பதற்கு என்னதடை? இல்வாழ்க்கையிலே நி[illegible] மனைவியோடும் மக்களோடும் சுற்றத்தோடும் கூடி யின்புற்[illegible] தாம் செய்த வேள்வித் தொழிலால் தேவராய் ஆண்டும் இ[illegible]றுவா. தவத்தினாலே துன்பமுற்று அடையப்படுவதாகிய [illegible]னுலக இன்பத்தை ஈண்டும் இன்புற்று அடைதல் அன்பினாலன்றி இல்லை. ஆனதுபற்றித்தான், 5.'இவ்வுலகத்து இல்வாழ்க்கையில் நின்று இன்பம் நுகர்ந்து அதன்மேல் விண்ணுலகிற்சென்றடையும் பேரின்பத்தை, அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்' என்க. இனி இவ்வன்பு அறமொன்றிற்கே துணையாயு[illegible] என்று கூறுவர் சிலர். அது தவறு. ஏன்? ஒருவன்செய்[illegible] பகைமைபற்றி உள்ளத்தே மறம் தோன்றியவிடத்து, அவனை நட்பாகக்கருதி அவன்மேல் அன்புசெய்ய அது நீங்கிவிடும். ஆகவே மறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாக நிற்கின்றதன்றோ. ஆதலின், 6. 'அன்பு துணையாவது அறத்திற்கே யென்று சொல்லுவர் அறியாதவர் சிலர்; ஏனைமறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாவது' என்க.

இத்தகைய அன்பு இல்லாவிடத்து உயிர்கட் குண்டாவது தீமையே. 7. 'என்பில்லாத உடம்பை வெயில் சுடுதல்போல, அன்பில்லாத உயிரை அறக்கடவுள் சுடுவான்.' வெறுப்பின்றி யெங்கும் ஒருதன்மைத்தாகிய வெயிலின்முன்னே புழுமுதலானவை தம்மியல்பாற்சென்று கெடுவதுபோல அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லாத உயிர் தன்னியல்பாற் சென்று

---

5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
இன்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

6. அறத்திற்கே யன்புசா ரென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

கெடும் என்க. இன்னும் அன்பில்லாவிடத்து அருமையாகப் பெற்ற இவ்வுடம்பால் யாதொரு பயனும் உண்டாதலில்லை. 8. 'மனத்தின்கண் அன்பில்லாத உயிர் [illegible]டத்தோடு கூடிவாழ்தல், வன்பால் என்னும் நிலத்திலே [illegible]ந்த மரம் தளிர்த்தாற் போலும்.' கூடாதென்க. மேலும் ஒ[illegible]வனுக்கு இடம் பொருள் ஏவல் முதலியவற்றை இல்வாழ்க்கை[illegible]பயன்படுத்துவது எது? அன்பு ஒன்றே. அஃதில்லாவிடத்து அவை சிறிதும் பயன்படுதலில்லை. 9. 'உடம்பினகத்தே நின்று இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு, மற்றைப் புறத்திலே உறுப்பாவனவெல்லாம் அவ்வறம் செய்தற்கண் என்ன உதவியைச்செய்யும்?' அன்பில்லையேல் இடம் பொருள் ஏவல்கள் ஒருதவியும் செய்யமாட்டா. சுருங்கச் சொல்லுமிடத்து, 10. 'அன்பு முதலாக அதன் வழிநின்ற உடம்பே உயிர்நின்ற உடம்[illegible]; அவ்வன்பில்லாதவர்க்கு உள்ள உடம்புகள் என்பைத் தோலாற் போர்த்தனவாம், உயிர்நின்ற உடம்பாகா' என்க. இல்லறம் பயன்படாமையால் அவை உயிர்ற்ற உடம்புகளெனற்கு யாதுதடை? ஆதலின் அன்புடைமை இல்வாழ்க்கைக்கு இன்றியமையாததென்றுணர்க.

இதுகாறுங் கூறியவாற்றால், அன்பு பிறர் அறியாதபடி மறைத்து வைக்கமுடியாததொன்றென்பதும், அன்புடையவர் மற்றைப் பொருளாலுமன்றித் தம் உடம்பாலும் பிறர்க்கு உரியரென்பதும், அன்புசெய்தற்பொருட்டே உயிர்க்கு உடம்போடு தொடர்ச்சி யுண்டாயிற்றென்பதும், அன்பு ஆர்வத்தைத்தர அது நட்பைத்தருமென்பதும், இல்வாழ்க்கையிற்பொருந்திய அன்பின் பயனே விண்ணுலகிலடையும் பேரின்பமென்பதும், அறத்திற்கே

---

8. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

9. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

10. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

யன்றி மறத்தை நீக்குதற்கும் அன்பே துணையாவதென்பதும், அன்பில்லா வுயிர்களை அறக்கடவுள் சுடுமென்பதும், அன்பில்லா உயிர்வாழ்க்கை கூடாதென்பதும், உள்ளன்பில்லாதார்க்கு இடம் பொருள் ஏவல்களிருந்து பயனில்லை யென்பதும், அன்பில்லாத உடல் உயிரில்லாத உடம்புபோன்றதென்பதும், பிறவும் பெறப் பட்டன.

செவ்வாய்.

(வெண்டாமரை க, இதழ் ச, 84-ம் பக்கத் தொடர்ச்சி.)

நாம் இவ்விஷயங்களை விவேசனம் செய்யுங்கால், செவ்வாயில் இப்பூவுலகி லில்லாத ஜீவராசிகள் வசிக்கும் அடையாளங்கள் காணப் படுகின்றனவெனத் தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது. இக்கிரகத்தில் பிராணிகளிருக்கின்றனவென நிச்சயிப்பதற்கு வேறுகாரணங்க ளுண்டா வென இப்பொழுது ஆராய்வோம். கிரகங்களெல்லாம் முதலில் ஆவி ரூபமாயிருந்தன வென்றும் பிறகு படிப்படியாய்ச் சூடுகுறைந்து திரவ ரூபமாகவும் கனரூபமாகவும் மாறுகின்றன வெனவும் முன்னமேயே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இப்பூமியிலும் உயிர்கள் பின் சொல்லும் விதமே உண்டாயிருக்கவேண்டும். தண்ணீர் உண்டானதும் புல் பூண்டுகளுக்கும் ஜீவராசிகளுக்கும் மூலம் ஏற்பட்டு உயிர் அணுக் கள் உதித்தன. உறுப்புக்கள் அமையப்பெற்ற ஒவ்வொரு ஜீவனும் பிராணவாயு, ஜலவாயு, லவணவாயு, கரி, கந்தகம், நிபாக்கினி முதலிய வற்றின் சிக்கலான ஓர் பௌதிகச்சேர்க்கை (chemical combination) யாயிருத்தலால், மேற்சொல்லிய பூதங்களுள் ஒன்றற்கொன்று இருக் கும் பௌதிகசம்பந்தம் காரணமாக இச்சேர்க்கை தானாகவே உண்டா யிருக்கலாம். பிறகு பௌதிக சேஷ்டை (chemical action) யால் அநேகவித பிராணிகள் உண்டாயிருக்கலாம்.

ஒரு கிரகத்தின் நிலைமை ஸாதகமா யிருக்கும்வரையில் அதில் ஜீவராசிகள் கட்டாயம் உண்டாகுமெனத் தெளிவாய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றது. தண்ணீரும் காற்றும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமை யாதனவென நாமெல்லோரும் நம்புகின்றோம். இவ்விரண்டு வஸ்துக் களும் செவ்வாயில் இருக்கின்றன வென நிரூபித்து விட்டோம். நீரும் வாயு மண்டலமும் சீதோஷ்ணஸ்திதியைச் சமப்படுத்தி அதைப் பிராணி

களுக்கு வாசயோக்கியமா யிருக்கும்படி செய்கின்றன. செவ்வாயில் பிராணிக ளிருப்பதற்கு வேண்டிய இச்சின்னங்களைத்தவிர, (வளநிலத் தாக்குகளைப் (Oases) பற்றிய சித்தாந்தம் உண்மையாயிருந்தால்) புல் பூண்டுகள் உண்டாகி மறைவதும் கண்ணுக்குப் புலப்படுகின்றது. சுமார் $3\frac{1}{2}$ கோடி மைல் தூரத்திலிருந்து நாம் இத்தனை விஷயங்களைக் கண்டறியக்கூடுமாயிருப்பது உண்மையாகவே ஆச்சரியப்படத் தக்கதாயிருக்கின்றது. செவ்வாயில் பிராணிகள் இருப்பதை நேராய் ஒருவரும் பார்த்ததில்லை. ஆகிலும் அங்குள்ளாரது மனமுயற்சியின் பயனாகத் தோன்றும் வஸ்துக்களைக் கொண்டு அங்கு ஜீவராசிகளிருப்பதாய் அநுமானிக்கப்படுகிறது. கால்வாய்த் திரள்களும் வளநிலத் தாக்குகளும் புத்தியுடைய பிராணிகளின் கைகளாலேயே உண்டாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

செவ்வாய் தன் பிரகிருதிக் கேற்பத் தான் தரக்கூடியவைகளைத் தந்து அவ்வுலகினனுக்குச் சகல செளகரியங்களையும் ஏற்படுத்தி யிருந்தால் அங்குள்ளான் எப்படிப்பட்ட மனிதனாயிருக்கவேண்டும் என இப்பொழுது ஆராய்வோம். அவனுடைய உருவத்தையும் சரீர பரிமாணத்தையும் தீர்மானிக்கக்கூடிய சில நியாயங்களை விசாரிப்போம்.

முதலாவது, அந்தக்கிரகம் பிராணிகள் வசிப்பதற்கு யோக்கியமான நிலைமையில் இருக்கின்றது; இரண்டாவது, அதில் நீர் நிலைகள் அருமையாயும் ஒன்றிற்கொன்று வெகுதூரத்திலும் இருப்பதால் ஜனங்கள் கட்டாயம் கால்வாய்கள் வெட்டவேண்டியதா யிருக்கின்றது; மூன்றாவது, அதன்கண் கால்வாய்கள்போல் தோன்றும் சில வரிகள் காணப்படுகின்றன; நான்காவது, இக்கிரகத்தில் இயற்கையில் பசுநிறத்த பயிர் நிலங்கள் இருக்கவேண்டுமென நாம் உத்தேசிக்கக்கூடிய இடங்களில் புள்ளிகள் காணப்படுகின்றன என்னும் விஷயங்களை நாம் இதுகாறும் நிரூபித்தோம். ஆயினும், இந்த நியாயங்களெல்லாம் அகஸ்மாத்தான ஸம்பாதங்கள், அவைகளால் ஒன்றும் ஏற்படாது என்றாலோ, அப்படியல்ல. செவ்வாயின்கண் உள்ள ஜீவராசிகளுக்கும் இப்பூமியிலுள்ள ஜீவராசிகளுக்கும் அவசியம் வித்தியாசமிருக்கவேண்டுமென்று நாம் அநுமானிக்க வேண்டியிருக்கின்றது.

(தொடரும்.)

சு. சுவாமிநாத தீக்ஷிதர், B. A., L. T.

புதுவை.

பண்டைக்காலத்துத் தமிழ் மகளிர் வீரம்.

சமூகத்தின் தேர்ச்சிக்கு மகளிர்முன்னேற்றம் அத்தியாவசியகம் என்பது யாவரும் அறிந்ததொன்றேயாகும். கல்வியறிவும், மனோதிடமும், சமூக உணர்ச்சியும், மதாபிமானமும் உடையவர்களாக அவர்களை ஆக்குதல் ஆசாரச்சீர்திருத்தக் காரர்களின் முக்கிய கடமையாகும். இத்தகைய உணர்ச்சிகளைப் பழக்க முறையில் கொண்டு வருவதற்காக நம் சீர்திருத்தக்காரர்கள் கைக்கொண்ட முறைகளைவிட வீரமும், புகழும், நல்லன் யாவும் செறிந்து விளங்கும் பண்டைய தமிழ் இலக்கியப் பயிற்சியே மிகவும் ஏற்றதென நான் நம்புகிறேன். உதாரணமாக நம் பண்டைத் தமிழ் மக்களின் வீரத்தையும் கல்வி நலத்தையும் விளக்குவதான அருமையான சில ஆன்றோர் எழுதித் தந்த பாக்களை மாத்திரம் இங்கு எழுதுகிறேன். அனுமான விவகாரங்களில் நான் தலையிடவில்லை.

பின்வரும் பாட்டு, தன் உறவின் முறையார் யாவரையும் இழந்தும், தன் தேசத்தின்மீது படையெடுத்துவந்த மாற்றலர் அதிக்கிரமத்தைப் பொறுக்காது, தன் ஒரே மகனைச் செருக்களத்துக்குச் செல்கென விடுத்த வீரத்தாயின் புகழினை எடுத்துப் பாடுவதாகும். இதைப் பாடியவரும் ஓர் வீரப் பெண்மணியேயாம்.

"கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனா ளுற்றசெரு விற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்றசெரு விற்கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுபட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

(புறநானூறு–உஎக.)

(இதன் பொருள்) இவள் சிந்தைகெடுவதாக. இவள் துணிவு மிகவும் கொடியது. இவள் மூதின்மகள் எனச் சொல்லத்தக்கவள் ஆவாள். முன்னாள் நேர்ந்த சண்டையில் இவள் தமையன் யானையினால் எறியப்பட்டுக் களத்து மாய்ந்தனன். முன்னை நாள் நிகழ்ந்த சமரில் இவள்

கணவன் பெருவீரத்துடனும் சண்டையிட்டு அங்கு மாண்டான். எனினும், இன்றும், சண்டைப் பறையைக்கேட்டு மகிழ்வு மிகுத்து வேலினைக் கையில் கொடுத்து, வெளிய உடை உடுத்தி, பரந்துகிடந்த குடுமியை எண்ணெயிட்டுச் சீவி (வாரி) முடித்துத் தன் ஒரே மகனைச் சமர்க் களத்திற்குச் செல்லென விடுக்கிறாள்! என்றவாறு.

இதனையே புறப்பொருள் வெண்பாமாலையிலும், பால்மணமும் மாறாத சிறு புதல்வனை அவன் முன்னோர் புகழினை எடுத்துக்காட்டாகக் கூறி அனுப்பினாள் எனக் கூறுவார்,

“வந்தபடை நோனாள் வாயின் முலைபறித்து
வெந்திற லெஃக மிறைக்கொளீஇ........”

எனவாரம்பிப்பர்.

மேலும், சென்ற அவ்வொரு புதல்வனும் செருமுகம் சென்றான் வெற்றியுற்றுத் திரும்புவதன்றி, மற்றையவாறு திரும்புதல் அரிது. அவன் களத்துப் பொருது இறப்பதையே பெரும்புகழாகக் கருதுவர். தன் படையைவிட்டு ஓடிப் படைமாறினன் எனக்கேட்ட அன்னையின் மனக்கொதிப்பைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பின்வருமாறு விளக்குகிறார்:

“நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே!”

(புறநானூறு உஎஅ.)

(இ-ள்.) நரம்புகள் வெளித்தோன்றும்படி இளமைமாறாத மென்மையான தோள்களையும், நுண்ணிய இடையையும் உடைய அவ்வறிவின் மிகுத்த பெண்மணியின் பிள்ளை படையைவிட்டு ஓடிவிட்டான் என்று பலர் சொல்லிக்கொள்ள, “போரில்தளர்ந்து முதுகிட்டு வந்தனன் ஆயின், அவன் உண்ட என்முலையை அறுத்து எறிவேன்” எனக்கோபித்துச் சபதமிட்டு, கையிற் கொண்ட வாளுடன் இறந்துகிடந்த பிணங்களை அப்புறப்படுத்தாத சண்டைக்களத்தில் தேடி நின்றவள் வெட்டப்பட்டு

இருகூறாகக்கிடந்த இறந்த தன்மகன் கிடப்பதைக் காணவும், அவனைப் பெற்றெடுத்த அந்நாளைவிட மிகுதியும் மகிழ்ச்சியுடையவள் ஆயினாள்.

மற்றும், தன்மகன் வெற்றியொடு களத்துச் சமரிட்டு மடிந்து கிடந்த கோலத்தைக்கண்ட மற்றைய ஒருதாயின் உவகைப் பெருக்கினைத் தமிழ்த் தாயாம் ஔவை,

"கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்
வேந்துவாய் மடித்து வேறலைப் பெயரித்
தோடுகைத் தெழுதருந் தூங்தெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி
யிடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
வோடாப் பூட்கை விடலை தாய்க்கே!"

(புறநானூறு ௨௯௫.)

எனப் பாடுகின்றனர்.

(இ-ள்.) கடல் பெருகியதுபோலக் கட்டூர் நடுவில் வேந்தன் பக்கலிலிருந்து கொன்று சண்டையிட்டு வெற்றியைக் கைக்கொண்டு, தோள் நெருங்கத் துகைத்து எறிகின்ற போர்க்களத்தின் மேல் வருகின்ற படையைப் பிளந்து சிறப்புறவிளங்கி, சேனைகள் இடையில் கீழ் வீழ்ந்து சிதைந்து உடல்வேறாகிய அப்பெருமையாளன் கிடக்கையைக் கண்ட, முதுகிடாத விரதத்தையுடைய காளையின் தாய்க்கு வாடியிருந்த முலை பால் ஊறிச் சுரந்தன எ-று,

(வரும்.)

கடியலூர்க் கயற்கண்ணி.

புகழேந்தி.

(வெண்டாமரை ௬, இதழ் ௪, 91-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதனைக்கேட்ட மன்னவன் மனைவி மகிழ்ந்து, கதவைத்திறந்து புலவர்க்கு ஆசனம்கொடுத்து வரவேற்றனள். அன்றுமுதல் புகழேந்தியார்க்கு இலக்கினச் சனியன் நீங்க இலக்கினச்சுக்கிரன் வந்தடைந்தான். இராசமாதேவி ஊடல்தணிந்தனள் எனக்கேட்ட அரசன் இவர்மேல் அன்புகூர்ந்து தனது கண்போல் ஆதரித்து வருவானாயினன்.

நிற்க, புலவர் புராணத்தார் இவர் சிறைநீங்கியதை வேறுவிதமாகக் கூறுவார்:—

குலோத்துங்கன் உயகத்தனது குருவாகிய கூத்தர் இருப்ப, பவனிவருதல் வழக்கம். பவனிவருநாள் நெருங்கியபோது புகழேந்தியார், தமது சிறைச்சாலைக்கு அருகில் வரும் யாதர்களிடம், தாம் அப்பவனியைப்பார்க்க ஆவல்கொண்டு இருப்பதாகச் சொன்னார். அரசன் பவனிபோகுந் தெருவினில் இவரை ஒரு அவரைப் பந்தலிலே கொண்டுபோய் வைத்தனர். அங்கு நம்புலவர் கூத்தரிட்ட விலங்குடனும், தலையில் மடவார் கவிழ்த்த சித்திரச் சட்டியுடனும் நின்றிருந்தார். அன்றிரவு குலோத்துங்கன், கூத்தர் பாதத்தைத் தன்முடியிற்சூடிப், பலவித ஆடம்பரங்களுடன் புகழேந்தியார் நிற்கும் அவரைப் பந்தர்க்கருகில் வந்தான். அப்போது யாவரும் நகைக்க, அரசன் வியப்பும், நாணமும், கோபமும் கொண்டவனாய்ப் பக்கத்தில் நின்றவர்களை "நகைத்தற்குக் காரணம் என்ன?" என்றுகேட்டான். அவர்கள், "அரசே! தாங்கள் வெண்கொற்றக்குடையினை இவ்விரவில் கொண்டுவருதலால் அன்றி வேறொன்றுமில்லை; அன்றியும் அற்பர்க்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பர் என்பது பழமொழியன்றோ" என்றார்கள். அப்பொழுது குலோத்துங்கன் 'இஃது தேவர்தம் பவனிக்குத்தகும், நமக்குத்தகாது. இவர்கள் கூறுவது முண்மையே' என எண்ணித் தன்முடிமேல் உள்ள ஒட்டக்கூத்தரை விளித்து, "ஐயா! பண்டிதர்களும் தேவர்போல்வராதலின் நீர் இதற்குக்காரணங் கூறும்" என்றான். கூத்தர் ஒன்றுங்கூற அறியாராய்த் திகைப்பூண்டு மிதித்தாரைப்போன்று அலமந்திருந்தார். இதைக்கண்டவர் 'ஓ' என ஆரவாரித்துக் கூத்தரை அவமதித்தனர். அவரைப்பந்தரிலிருந்த புகழேந்தியார் அரசன் வாடுவதனைக்கண்டு ஓர் அமிழ்தினும் இனிய பாடல் பாடினர். அந்தப்பாடல்,

அண்டமீ துலவி வாழு மருந்ததிக் கற்பா ளுன்னைக்
கண்டதா லுவகை யெய்திக் கற்பழிந் திடுவளென்றே
எண்டிசை புரக்கும் வேந்தா யிரவினிற் கவிகைநீழல்
கொண்டுமா நடாத்துமாறு குலோத்துங்கா நீதி தானே.

என்பதே.

யாவரும் சப்தம் வரும் திசையைநோக்கினர். அசரீரியோ என ஐயுற்றனர். பின்பு நெருங்கிச்சென்று பார்த்தகாலத்து அங்கு ஒரு சித்திரச்சட்டி காணப்பட்டது. அதனை நீக்கப் புகழேந்தியார் வெளிவந்தார். அரசன் பின்பு அவருடைய விலங்குகளை நீக்கி ஒட்டக்கூத்தருடன் இருத்தினன். பின்பு அரண்மனைக்கு அழைத்துச்சென்று

'அந்தோ இப்பெரியார்க்கு யாரோ இக்குற்றம் செய்தார்' என வாடி இருந்தான். பின்னர், புலவரிருவரையும் தன் சிங்காதனத்து வலமுமிடமுமாக இருத்தித் தன்னிரு கண்களைப்போல் கவனித்துவந்தான். புகழேந்தியார் ஒட்டக்கூத்தரிடம் இடர்ப்படுதலைக் கேட்டு, அரசன் மனைவி, தனது நாயகன் அரசாட்சியினில் வழுவினதாலன்றோ இவ்வாறெல்லாம் நடந்ததென நினைத்து, கோபங்கொண்டு தானே கதவினைத் தாழிட்டாள். யானையினின்று அரசன் இறங்கித் தன்னிருபக்கத்திலும் இருபுலவரும் வரத் தன் மனைவியினிடம் நடந்தவற்றைக் கூற அந்தப்புரம் வந்தான், கதவடைத்தமையைக்கண்டான். மனம் நொந்தான். கூத்தனை நோக்கி 'நீர் ஊடல் தணிய ஓர்கவிபாடும்' என்றான். உடனே கூத்தர் 'இழையொன்றிரண்டு' எனும் பாடலைப் பாடினர். பாண்டியன் மகள் "உன்னுடைய கைக்கோலக் குலவழக்கு நின்பாடலிலும் வந்து புகுந்தது போலும், ஊடல்தணிக்கப்புகுந்தவன் என் அழகினைவருணித்தல் என்னை? நாட்டில் இம்மன்னன் ஒருவன்தானா உளன்? நான் பிழைபொறுப்பது நின்னுரையினைக் கேட்டுத்தானோ? பேதையென என்னை அழைத்தல் தக்கதோ?" என்று முன்னினும் பன்மடங்கு சினங்கொண்டு, 'மூா ணெட்டக் கூத்தன் பாட்டினிற் கிட்டைத்தாள்' என்று மற்றொருதாள் இட்டனள். இதைக்கண்ட சோழன், 'இனி ஊடல்தணியாது விடின் நமக்கும் பாண்டியற்கும் போர்விளையுமே, பிறகு என்னவாமோ' என எண்ணிப் புகழேந்தியாரைநோக்கி, "நீராவது ஓர் பாடல் நன்றாய்ப் பாடும்" என்றான். உடனே புகழேந்தியார், 'நானே இனியுன்னை' எனும் பாடலைப் பாடினர். இதனைக் கேட்ட இராசமாதேவி "நம் கை செந்தாமரை யன்றென்போமேல் நம் கற்பின் திறத்திற்கு இழிவுவந்தெய்தும். நங்கணவனைச் சூரியகுலத்தவ னல்லனெனின் அற்பனை மணந்த பழிவந்தெய்தும்" என எண்ணி, ஒன்றும் சொல்லமாட்டாதவளாய் உடனே கதவினைத் திறந்தனள் என்பது.

மேற்கூறியநூல் புராணத்தார், நாம் முன் புகழேந்தியார் கூறியதாகக்கூறிய 'இழையொன்றிரண்டு' எனும் பாடலைக் கூத்தர்பாடியதாகவும், கூத்தர்பாடியதாகக்கூறிய 'நானே' என்பதை புகழேந்தியார்பாடியதாகவும் கூறுகின்றார். தமிழ் நாவலர் சரிதையுள், 'புகழேந்தியார் தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது பாடியது' எனுந்தலைப்பின்கீழ் இவ்விரண்டு பாடல்களும் காணப்படுகின்றன. மற்றுக் கூத்தர் பாடியதாக, கண்டன்தேவி ஊடல் உற்றுக் கதவடைத்தபோது பாடியது எனும் தலைப்பின்கீழ்,

கரத்துஞ் சிரத்துங் களிக்குங் களிற்றுடைக் கண்டன் வந்தான்
இரத்துங் கபாட மினித்திறப் பாய்பண் டிவனிங்கே
உரத்துஞ் சிரத்துங் கபாடந் திறந்திட்ட துண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங்கல் யாண புரத்தினுமே.

எனும் பாடல் காணப்படுகிறது. நாம் கூறியது கர்னபாரம்பரையில் வழங்குவது. எனினும் தமிழ் நாவலர் சரிதையுள் கூறியதே வலியுடைத்தாம்.

சிறை நீங்கிச் சிலநாட்கள் சென்றன. கூத்தரும், புகழேந்தியாரும், கம்பரும், குலோத்துங்கன் சபையில் முச்சுடர்போல் விளங்கினர். குலோத்துங்கன் யாவரையும் ஒரேசரியாக உபசரித்துவந்தனன். கூத்தரோ முன்போலவே புகழேந்தியார்பால் பகைமையும் பொறாமையும் பாராட்டிவந்தனர். கம்பர் முதலோர் புகழேந்தியார்பால் நட்புப்பாராட்டிவந்தனர்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் குலோத்துங்கன் துலாபுருடதானம் செய்ய முன்னிட்டபோது,

பொருந்த வொருதட்டு மேருப் புகினும்
இருந்த திருத்தட் டெழாதால்—திருந்து
மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறை புக்க தெவ்வாறு நீ.

என்ற பாடலைப் புகழேந்தியார் பாடினர். இப்பாடல் தமிழ்நாவலர் சரிதையுள், புகழேந்தியார் இராசா துலாபுருடதானம் பண்ணியபோது பாடியதாகக் காணப்படுகின்றது. ஒட்டக்கூத்தர் அப்போதுபாடியது:

"தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொன் றுலாத்திடைவண்
டுழுகின்ற தார்க்கண்ட னேறிய ஞான்றி னுவாமதிபோய்
விழுகின்ற தொக்கு மொருதட்டுக் காலையில் வேலையில்வந்
தெழுகின்ற ஞாயிறொத் தான்குல தீப னெதிர்த்தட்டிலே."

பின்னாள் இவ்வாறு சோழநாட்டிலேயே இருந்தார். கூத்தர் பொறாமை ஒழிந்தபாடில்லை. புகழேந்தியார் பொறுமையும் நீங்கியது. மேலும் அங்கே இருப்பின் தம்மிருவர்க்கும் மாறுபாடுகள் உண்டாம் என்றெண்ணி, சோழனிடஞ் செலவுபெற்றுச் சோணாடுநீங்கி மள்ளுவஞ்சேரச் சென்றார்.

(மு-க.) நாம் மேற்கூறியன உண்மையாய் நடந்திருக்கலாம். அதற்கோர் சந்தேகப்பாடில்லை. ஆனால் புலவர் புராணம் வேறு

வகையாகவும், கர்னபரம்பரை வேறாகவும், தமிழ் நாவலர் சரிதை வேறு வகையாகவும் கூறுகின்றன எனினும், நாம் தமிழ் நாவலர் சரிதையே உண்மை எனக்கொள்ளல்வேண்டும் என்பது பலபண்டிதரது கொள்கை. மேல், ஒட்டக்கூத்தர் புலவர்களைக் கொன்றிருப்பாரோ என்பது ஓர் ஐயம். தமிழ் நாவலர் சரிதையும், கர்னபரம்பரைக் கதையும், மற்றை யோரும், காளிமுத்தம்மையும் கூறுவனவற்றைப் பார்த்தால் அநேக மாகக் கொன்றிருப்பார் என்று ஊகிப்பதற்கிடமுண்டு. வரும் அத்தாட் சிகள் எல்லாம் இதனையே மெய்ப்படுத்துகின்றன. இதற்கு மாறான கதையொன்றும் சொல்லவும் எப்போதும் கேட்டதில்லை.

தென்பட்டினம் - மீனாக்ஷிசுந்தரன்.

மூவதியார் அருளிச் செய்த ஐந்திணை யெழுபது.

குறிஞ்சி.

(வெண்டாமரை ௬, இதழ் ௪, 88-ம் பக்கத்தொடர்ச்சி.)

௨. கொல்லைப் புனத்த வகில்சுமந்து கல்பாய்ந்து
வானி னருவி ததும்பக் கவினிய
நாட னயமுடைய னென்பதனா னீப்பினும்
வாடன் மறந்தன தோள்.

தலைவி கூறியது.

(இ - ள்.) ஆகாயத்திலிருந்து பெய்யும் மழைநீர் கொல்லைப்புனங் களின் இடையே ஓடி, அங்கு வளரும் அகில்மரங்களையும், அகிற் கட்டை களையும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு சென்று பாறைகளின் வழி யாகப்பாய்ந்தோடிச் சலசலவென்று முழக்கஞ்செய்வதனால் அழகுமிகுந்த நாடன் ஆகிய என் காதலர், தன்னை வந்து அடைந்தவர்க்குக் குளிர்ந்த மனதையுடையவர் என்ற ஒரு காரணத்தினால், என்னைவிட்டு அவர் பிரிந் திருக்கும் இக்காலத்திலும் என் தோள்கள் வாடாமல் இருக்கின்றன.

இவ்விடத்தில் "அகில் சுமந்து கல் பாய்ந்து" என்ற சிறப்பு மொழிகளை அருவிக்கு எடுத்தாண்டது, அருவியின் வழியில் தடையாக நின்ற அகில்களை வேருடன் களைந்தும், பாறைகளைக் கிழித்தும், தான் குறித்த இடத்தைத் தவறாது சென்று அடைவதுபோல், தலைமகனும் இடையூறுகள் எவை நேர்ந்தபோதிலும் அவைகளை நீக்கித் தலைவியைத்

தவறாது வந்துசேர்வான் என்பதுதோன்ற. தன்னைவந்து அடைந்தவர்க்கே தண்ணளியன் தலைமகன் எனின் தானாகவே தலைவியிடம் சென்று அவள் காதலை வேண்டிப்பெற்ற அக்கொடிச்சியிடம் இவன் எவ்வளவு அன்புடையவனாக இருப்பான் என்பது இனிது விளங்கும். "நீப்பினும்" என்ற இடத்துப் பரத்தையிற் பிரிவு உணர்த்தப்பட்டது என நச்சினார்க்கினியர் கூறுவர். ஆனால் "நயனுடையன்" என்பதனால் அது இவன் மாட்டுக் குற்றம் அன்று எனவும், அவனை விடாது பற்றி ஈர்த்துநின்ற பரத்தையரே காரணம் எனவும் கூறித் தன் தெளிவினை யுணர்த்தினாள் என்க.

இந்தச் செய்யுளை "வரைவு தலைவரினும்" (தொல் - பொருள் - களவி - ௧௧௧) என்ற இடத்து உதாரணமாகக்கூறினார் நச்சினார்க்கினியர். நயனுடையன் என்பதனால் வரைவு தலைவந்தமையும் நீப்பினும் என்பதனால் அவன் வயிற் பரத்தைமையுங் கூறினார் என்பர். இதனையே

"வெளிப்பட வரைதல் படாமை வரைதலென்
றாயிரண் டென்ப வரைத லாறே" (தொல் - பொரு - களவி - ௧௪௦.) என்ற விடத்தும் எடுத்தோதி இது வெளிப்படாமல் வரைவு நிகழ்ந்தது" எனக்கூறுவர்.

௩. இலையமர் தண்குளவி வேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்த ளினவண் டிமிரும்
வரையக நாடனும் வந்தான்மற் றன்னை
யலையு மலைபோயிற் றின்று.

தோழி கூறியது.

(இ - ள்.) இலைகள் நிரம்பத் துளிர்க்கவிட்டுக் குளிர்ந்த மல்லிகைக் கொடிகள் படர்ந்து மூடிய காட்டில் பூங்கொத்துகளை மிகுதியும் உடைய காந்தள் மரத்தில் வண்டுகள் திரள் திரளாக வந்து பாடி நிற்கும் அழகிய மலைநாடனும் வரைவேன் எனச் சொல்லி வந்தாள் ஆதலால் இன்றோடு அன்னையின் தூற்றல் முடிந்தது.

இங்கு, தண்குளவிக் கொடிகள் படர்ந்து மரங்களை மூடிற்று எனறது, மணம் புரிதல் முன்னாட்களில் நிகழ்ந்த களவொழுக்கங்களை மூடுவதுபோல் ஆகும் ஆதலால். வரைதற் பின்னர்க் கற்புடன் இல்லில் வதியும் நல்லறத்தைக்குறிக்கும் முல்லையைக் குறிப்பிக்கக் கருதினார், முல்லை குறிஞ்சி நிலத்திற் கொவ்வாமையின், அதன் இனமாம் காட்டு மல்லிகையை இங்கு வைத்துப் பாடினார். களவொழுக்கத்தின பின்னர் இல்லறமே நிகழ்தல் வேண்டும் என்பது இவர் கருத்து என்பது இவர்

திணைப்பாடல்களில் குறிஞ்சியின் பின்னர் முல்லையைக் கோத்த முறைமையினின்றும் அறியக்கிடக்கும். வண்டுகள் ஒலிப்பது இல்லகத்தே கூடிய உறவினர் யாவரும் மணத்திற்குத் தலைமகன் உடன்பட்டமை பற்றிக் கொள்ளும் மகிழ்ச்சியைக் குறிக்கும்.

இதனை நச்சினார்க்கினியர் "வரை வுடன்படுதலும்" என்றதற்கு உதாரணங் கூறினார். (தொல் - பொருள் - களவு - ௧௦௭.)

௪. மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுவந்து மந்தி முலைவருடக்—கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்.

தோழியிடம் தலைவி சொல்லியது.

(இ - ள்.) தோட்டங்களில் வளரும் பலாமரத்தின் சுளை முதிர்ந்த இனிய பழத்தைத் தின்று மகிழ்ந்து காட்டுப் பசுவின் முலையைப் பெண் குரங்கு தடவி நிற்ப, அந்தப் பசு தன் கன்றிற்குப் பால் ஊட்டுவதுபோல அன்புடன் பாலைச் சுரக்கும் அழகிய மலைநாட்டுத் தலைவனை நாமாக உயிருடன் உள்ள வரையில் பிரிவது இல்லை.

இவ்விடம் பெண்குரங்கு கள்ளத்தனமாக வந்து ஒழுகினும், பசு அன்புடன் பால் சுரப்பதுபோல், பலவின்பழம் உண்ட மந்திபோல, பரத்தையருடன் உறவாடிப் புணர்ந்து பின்னர்த் தன்னிடம் களவொழுக்கத்துடன் தலைமகன் வந்தான் ஆயினும், தான்மட்டும் அன்புடைய பசுப்போல் தன்காதலை யளித்ததைப் பலப்படக்கூறினாள். மந்திகள் செறிந்து நின்ற மன்றத்து, இம் மந்தி பசுவை நாடி நின்றது, பரத்தையர் செறிந்த சேரியினுள் தனக்குற்ற மாணிழை மகளிர் பலர் இருப்பினும், உயர் குடிப்பிறந்த தன்னை வந்தடைந்ததுபோல "பிழையொன்றிரண்டு பொறுரோ குடியிற் பிறந்தவரே."

௫. சான்றவர் கேண்மை சிதைவின்றா யூன்றி
வலியாகிப் பின்னும் பயக்கு—மெலிவில்
கயந்திகழ் சோலை மலைநாடன் கேண்மை
நயந்திகழு மென்றுமென் னெஞ்சு.

தலைவி கூறியது.

(இ - ள்.) அறிவாளர் நட்பு தளர்ச்சி அடையாது, நிலைபெற்று, ஊன்கொண்டு, தம்மைவந்து சேர்ந்தவற்கு மேன்மேலும் பயனைத்தரும். ஆகையால் நீர்வளம்மிகுத்துக் குளங்களால் அழகுசிறந்து நிற்கும் சோலை

களையுடைய என் மலைநாட்டுத் தலைவனின் நட்பின் திறன் குன்றாது இன்பத்தையே பயக்கும் என்கிறது என் நெஞ்சு.

இங்கு நீர்வளம் எடுத்தாண்டது தலைவனின் தண்ணீர்மையைக் குறிக்க.

சு. பொன்னிணர் வேங்கை கமழு நளிர்சோலை
நன்மலை நாட மறவல் வயங்கிழைக்கு
நின்னல்ல தில்லையா லியாஅரே கண்ணோட்டத்
தின்னுயிர் தாங்கு மருந்து.

தலைமகனுக்குத் தோழி சொல்லியது.

(இ - ள்.) பொன்போல ஒளிவீசும் மலர்க் கொத்துகளையுடைய வேங்கை மணம் வீசுகின்ற குளிர்ந்த சோலைகளையுடைய மலைநாடனே! மறவாதே தலைவியை! ஒளியுமிழும் அணிகள் பூண்ட அவளுக்கு, உன் கடைக்கண் பார்வையால் அவளது இனிய உயிரை ஆற்றிவைக்கும் உன்னை அல்லாது வேறு உயிர் காப்பாளர் இல்லை.

எ. காய்ந்தியே லன்னை யிவளோ தவறில
ளோங்கிய செந்நீ ரிழிதருங்-கானயாற்றுட்
டேங்கலந்து வந்த வருவி குடைந்தாடத்
தான்சிவப் புற்றன கண்.

தோழி கூறியது.

(இ - ள்.) அன்னாய்! கோபித்துக் கொள்ளவேண்டா! இவள் மேல் குற்றம் ஒன்றும் இல்லை! மலர்களினின்றும் விழும் தேனுடன் கலந்து உயர்ந்த இடத்திலிருந்து கீழ் விழுகின்ற செந்நீரையுடைய அருவியில் நீர் ஆடியதால் இவள் கண்கள் சிவந்தன.

இது தலைமகன் வெளியில் நிற்க, அவன் செவியிற் படும்படியாக, வெகுண்ட தாய்க்கு மறுமாற்றம் கூறுவாள்போலக் கூறிக் களவொழுக்கத்தைக் கடிந்து வரைந்து கொள்ளும்படி வேண்டியது. இது,

"ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழி கொடுப்பினும்" (தொல் - பொருள் - களவி - உ௩.) என்ற மேற்கோளின்வழி வந்தது. இதன் துறையைக் கூறவந்த பழைய உரையாசிரியர் இது "பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்து மொழிகிளவியாற் றோழி வரைவு கடாயது" என்பர்.

"வேங்கை நறுமலர் வெற்பிடை யாங்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றாங்கெனைத்தும்
பாய்ந்தருவி யாடினேம் ஆகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக்கண் டாம்." (ஐந்திணை ரு0-கசு)

என்ற மாறன்பொறையனார் பாடலும் இங்குக் கவனிக்கத் தக்கது.

(வரும்.)

R. வாசுதேவசர்மா,
புதுவை.

பரமபத சோபானம்.

(வெண்டாமரை சு, இதழ் ச, 94-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆதலால், சுகத்தை விரும்பும் ஒவ்வொரு விவேகியும் தனக்கு நேரிடும் துக்கத்திற்காகவாவது, கிடைக்காத சுகத்திற்காகவாவது நைந்துருகி மடிவதைவிட, சுகம் இன்னது, துக்கம் இன்னது, இவற்றைக் கொடுக்கக்கூடியசாதனங்கள் முறையே எவைகளெனச்செவ்வனே ஆய்ந்தறிவானாகில் அவனுக்கு அக்கணமே துக்கசாதனத்தைக் கைவிடுதலால் துக்க நிவர்த்தியும், சுக சாதனத்தைக் கைக்கொள்வதால் பரமானந்த பிராப்தியும் உண்டாவதற்குச் சிறிதேனும் ஐயமில்லை. இதை விடுத்து, சுகத்தை அடையும் மார்க்கம் எப்படி யிருக்குமோவென்றும், அதனை எவ்விதம் அடைவதென்றும், அதனை அடைய நம்மால் தாமாவென்றும், இவ்விதம் பலவாறு சிந்தித்து நாட்களை வீணில் கழிக்கும் மாந்தரின் மதியை என் சொல்வது? பூமியில் உழுதுபயிரிட்டு, நீர்பாய்ச்சி, களை பிடுங்கி, பாடுபடாமல் தன்வீட்டில் தானியங்கள் ஏராளமாய்வந்து குவிய வேண்டுமென்ற பேராவாக்கொள்ளும் குடியானவன்போல் சுகத்தை யடைவதற்கு வேண்டிப் பெரியோர்கள் அனுஷ்டித்துக் காட்டிய மார்க்கங்களில் உழைக்காமல், சுகத்தைமாத்திரம் அடைய விரும்பும் மாந்தர், அறிஞரால் மூர்க்கர் எனப்படுவர் அன்றோ? மேலும் எந்த வஸ்துவை அடைய வேண்டுமென்றாலும் அவ்வஸ்து இத்தன்மையதென அதனை நன்கறிந்த பெரியோர்களிடம் நீரவிசாரித்து அறிந்துகொண்டு பிறகு அதனிருப்பிடம் தெரிந்து அங்குத் தக்கபடி முயற்சிப்பானானால் எவ்வளவு துர்லபமானபோதிலும் அவ் வஸ்துவை அவன் எளிதில் அடைவான். காட்டிலுள்ள கஸ்தூரி மிருகத்தின் அங்க அடையாளங்களைக் கேட்டறியாத ஒருவன் வனத்தில் பலதடவை அதனைக் கண்ணுற்றிருந்தபோதி

லும் எப்படி யறியமாட்டானோ, அவ்விதமே, சுகமின்னதென்றும், அதனை யடையும் மார்க்க மின்னதென்றும் உணராதான் அதனையடைவது கடினம்; அல்லது அடைந்தும் அதனடைவை யறியான் ஆதலால், எதார்த்தசுகத்தை அடையவேண்டி அதற்குரியசாதனங்களுடன், அதன் மார்க்கத்தையும், சொரூபத்தையும் ஆராய்வாம்.

மனிதன் முதல் புழுவரையிலுள்ள சகல ஜீவராசிகளும் சுகத்தை அல்லது சுகத்தைக் கொடுக்கக்கூடிய விஷயத்தை யல்லாமல் வேறு பதார்த்தத்தை விரும்புவதில்லை என்பது எங்கும்பிரசித்தமாதலால், சுகத்தைவிட வேறுபுருஷார்த்தம் கிடையாதெனச் சித்தித்தது. மேலும் அச்சுகமானது ஜீவர்களால் நேற்றும் கோரப்பட்டது, இன்றும் என்றும் எல்லோராலும் எங்கும் விரும்பப்படுவதால், சுகமென்பது எப்பொழுதுமுள்ள (நித்ய) வஸ்து எனவும் தேசகாலங்களால் அந்தமில்லாத (வியாபக) வஸ்துவெனவும் அடையப்பட்டது. அன்றியும் அச்சுகமானது இதற்கு முன்னுள்ள மகான்களால் (நிருபாதிகமாய்) அடையப்பட்டும் தற்காலம் எம்போலியரால் அச்சுகத்தின் திவலையாகிய ஆபாசம்சமே, விஷயத்தி லுள்ளதாகக்கொண்டு நுகரப்பட்டும், சாதன சதுஷ்டய சமாதி சீலர்களான விவேகிகளால் அச்சுகமே நிரதிசயமாய் அனுபவிக்கப்பட்டும் வருவதால், சுகம் என்பது யாவராலும் அடையக்கூடியதென்பது நன்கு விளங்கும்.

இன்னும் ஆராயுங்கால், ஒவ்வொருவருக்கும் தன்னைவிட வேறு எவ்வஸ்துவிலும் அதிக பிரியமுண்டாவதில்லை. அப்படி கிஞ்சித்து பிரியமுண்டானாலும் அப்பிரியமும் தன்பொருட்டு அல்லது தன்னைச் சம்பந்தித்தே உண்டாகின்றது. ஸ்திரீ, புஷ்பம், சந்தனம், கானம், பழங்கள் முதலியன எவையும் தன் சுகத்தின் பொருட்டே விரும்புகிறான். தன் சுகத்திற்குப் பிரதிபந்தமாகுங்கால் அவைகளை விரோதித்து, தக்ஷணமே நீக்குகிறான். இதனால் தன்னைவிடப் பரம பிரேமைக்குரித்தான விஷயம் வேறில்லை யெனவும், அங்ஙனம் பரம பிரேமைக்குப் பாத்திரமானவிஷயம் சுகஸ்வரூபமேயன்றித் துக்கரூபமாயிருத்தல்பொருந்தாதாதலால் 'தான்' என்பது சுகஸ்வரூபமெனச் சித்தித்தது.

(வரும்)

M. V. சுப்ரமண்ய ஐயர்,
Pakala.

காரியதரிசிகளின் ஐக்கியத்தைப்பற்றிய ஓர் விண்ணப்பம்.

சங்கங்கள் அல்லது சபைகள்.

அரிய பல விஷயங்களைப்பற்றிப் பேசவும் ஆலோசிக்கவும் தீர்மானிக்கவும் பலர் ஒன்று கூடுவதே சங்கமெனப்படும். செவ்வையாகவும் உண்மையாகவும் நடத்தப்பட்டால் சங்கங்களைப்போற் பிரயோஜனமுள்ள காரிய மெதுவுமில்லை. இத்தகைய சங்கங்கள் அல்லது சபைகளின் மூலமாகவே பல சமயிகளும் பல பிரிவினர்களும் தங்கள் தங்கள் மனோபாவங்களை வெளியிட்டுச் சித்திபெறுகின்றார்களென்பது ஒருதலை. இம்மாதிரியான சங்கங்கள் பண்டைக்கால முதற்கொண்டே நமது தேசத்தில் நிலவிவந்திருக்கின்றன வென்பதைப் பழைய தமிழ்ச்சங்கங்களாலும் பழைய நூல்களாலும் நாமறியக்கூடும். ஆனாலும் இடைக்காலத்தில் கையாடப்பெறாமல் மறந்தே போயிற்றென்னலாம். இதுபோதோ எங்குப்பார்த்தாலும் சங்கங்களும் சபைகளும் கூட்டங்களுமாகவே காணப்படுகின்றன. இவைகளெல்லாம் நமது நற்கால அறிகுறியென்றே சொல்லவேண்டும்.

காரியதரிசிகள்.

இனி, இவ்வகையான சங்கங்கட்குக் காரியதரிசி யென்றொருவரின் நியமனம் முக்கியமாகின்றது. காரியதரிசி என்போர் காரியத் தலைவரெனப் படுவர். சங்கத்தை அழகுபெற நடத்தவும், ஆலோசனைக்கு வேண்டிய விஷயங்களைச் சபை முன் கொண்டுவரவும், சுருங்கச் சொல்லின் சங்க சம்பந்தமான எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று நிர்வகிக்கவும் அவரே உத்தரவாதியாகின்றார். சங்கத்திற்குண்டாகும் புகழோ அல்லது அதன் மறுதலையோ பெரும்பாலும் அவரையே சார்கின்றது. மற்றும் பல. ஆகவே சங்கத்திற்குக் காரியதரிசியே இன்றியமையாதவராகின்றார்.

காரியதரிசிகளின் சங்கம்.

உலகமானது சங்கங்களின் உதவியைக்கொண்டே பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து வருகின்றதென்பது கண்கூடு. அவைகளின் முக்கிய உறுப்பினர்கள் காரியதரிசிகளேயாகின்றார்கள். அவர்களின் இயக்கம் எப்படியோ அப்படியே சங்கங்களின் இயக்கமும் உண்டாகின்றது. காரியதரிசிகள் முற்போக்கை யடையின் சபைகளும்

அவ்வாறே யடையுமென்பது திருபவம். இக்காரணங்களினால் காரிய தரிசிகளின் சங்கமெனவோ அல்லது வேறுபெயருடனோ ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். அச் சங்கத்திற்கு இத் தென்னாட்டிலும் பிறநாடுகளிலுமுள்ள எல்லாச் சைவ சபைகளின் (ஒவ்வொரு நோக்க முடைய ஏனைய சகோதர சபைகளும் இவ்வாறே ஒன்றுபட்டுழைக்கு மாக) காரியதரிசிகளும் உறுப்பினராதல் வேண்டும். இச் சங்க நிகழ்ச் சிக்கு மேற்சொல்லிய எல்லாச்சங்கங்களும் சந்தா செலுத்திவரல் வேண் டும். வருடத்திற்கொருமுறை நகரங்களிலும், கூடுமானால் ஏனைய ஊர் களிலும் மகாநாடு (கான்பரன்ஸ்) கூடவேண்டும். சபையின் முன்னேற் றத்திற்கான பல விஷயங்களை ஆலோசித்து அதில் தீர்மானிக்கவேண் டும். தீர்மானப்படி நடக்க முயலவேண்டும். இவ்வாறு செய்யின் குறைக ளெல்லாம் நீங்கிப் பெரும்பயன் விளையுமென்பது நிச்சயம். இதனா லுண்டாகும் அதிக நலன்களை எல்லோரும் அடைந்து இன்புறக் கூடு மென்பதைக் காரியதரிசிகளாயுள்ள ஒவ்வொருவரும் நன்கு அறிவார்கள்.

வேண்டுகோள்.

ஆகையினாலே இது விஷயமான அபிப்பிராயங்களையும், மற்றும் இது சம்பந்தமான விஷயங்களையும் தயவுசெய்து கூடிய சீக்கிரத்தில் அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கவேண்டுமென, எல்லாச் சைவ சபைகளின் அல்லது சங்கங்களின் காரியதரிசிகளும் கேட்டுக்கொள் ளப்படுகிறார்கள்.

போ. மாணிக்கம்,
காரியதரிசி
சன்மார்க்க சபை,
தாதம்பேட்டைப்பழூர், (திரிச்சி ஜில்லா.)

ஐய வினா.

அநுபவ வைத்திய பண்டித மணிகள் இப்பத்திரிகை வாயிலாய் அடியிற் காட்டப்பட்டுள்ள செய்யுட்களின் பொருளை விளக்கியருளு மாறு வேண்டுகின்றேன். அச்செய்யுட்கள் தேரையர் அருளிச்செய்தவை.

சந்திரோதய மாத்திரை.

"காந்த ரிப்பகை பொரிபூரந் தொடிக மையாதி
சாந்த மொன்றரை யொன்றரை யொன்றரை சம்பீரம்
தாழ்ந்த ரைத்தன மணியென பணிபுரி மதனுமம்
சாந்து சந்திரோ தயமதி லழல்நோய் தரியாதே."

சோரங்கோட்டை லேகியம்.

“சோராங்கொட்டை லேகியத்தைச் சோராங்கொட்டை யம்பாவே
சோராங்கொட்டை யிரண்டுபங்கு சேரநலங்கள் மந்திரமும்
சேதா வலைநாற்கூறு சேர்த்தொன்பதுநா ளூறியபின்
சேணூர்மணிக்கந் நிலையதனைச் சேரொன் பதுநாள்மேலுலர்த்திச்
சேதித்த தூளிடித்ததனைச் சேர்முக் கடுகு கிராம்புப்பு
சேறுகுணமி தாகுமெனச் சேறுகுளமா சிரகம்புல்
சேரவிடுத்துத் தீயேற்றச் சேதப்படாது லேகியஞ்செய்
சேமித்தொருமா தப்பருவஞ் சேரவதன்பின் னதையெடுத்துச்
சேவற்றுவசன் முன்னவனைச் சேவித்திரண்டு பொழுதுமுண்டு
சேமநிதிபோற் பத்தியத்தைச் சேர்த்துவசிக்கப் பித்தஜன்னி.
சேணுமதியா கியநாமச் சேத்துமமருத்து வாதஜன்னி
சேத்துமமேகப் புண்குட்டச் சேர்க்கைவியாதி மதுமேகம்
சேனத்திறகிற் படர்தேமற் சேருமுடலப் பிணிகளெல்லாம்
சோரா தழகு வடிவினுக்குச் சேருமதிக பசியுண்டாஞ்
சேங்கன்றென்ன வுரமுண்டாம் சேகண்டியைப்போற் றொனியுண்
[டாம்
சேடனெனவே யின்பமெல்லாஞ் சேரத்துணையோ மேன்மேலும்
சேயின் முகங்களைப் போலுண்டாம் சேற்கேதனன்போ லெழிலுறு
[மே.”

நாட்டுவைத்தியன்.

பரிபாடல்.

(வெண்டாமரை ௫, இதழ் ௪, 97 - ம் பக்கத் தொடர்ச்சி.)

நச்சினார்க்கினியர் காலத்து நல்ல நிலையில் இருந்தனவாகிய எழுபது பரிபாடல்களும் நாளாவட்டத்தில் படிப்பாரும் எழுதுவாருமின்றி அழியத்தொடங்கின. பின்னர்ச் சித்தக்கோனன் என்னும் சைன வரசன் காஞ்சிபுரத்தில் தனது இராச்சியத்தாபனம் பண்ணிய சமீபகாலத்துத் தமிழ்நூல்கள் பல அக்காலக் குழப்பத்தினால் அழியத்தலைப்பட்டன. அப்போழ்து சைனமதப்பற்றில் உற்றாராகிய கந்தியென்பாரும் மேற்படி பரிபாடலைத் தம்மனம்போலாக்கக்கூடாது திருத்தத்தலைப்பட்டனர். உடனே பரிமேலழகியார் என்னும் ஒருவர் அதனைப் பலவாறு திருத்த

முயன்றும் பயன்படாது போயினவென்பது பின்வரும் பரதசூடாமணிப் பிரதியில் உள்ள வெண்பாவால் விளங்குகின்றது.

வெண்பா.

கந்தி பிழைப்புங் கவினறியா தேகெடுத்த
பிந்துபரி மேலழகன் றன்பிழைப்பும்—முந்து
பரிபாடல் பாக்கடமைப் பண்டுநிலை தோன்றா
துருவழித்த தென்றே யுணர்.

மேலும் இப்போழ்து பரிபாடல்கள் சில திரிவினவாயினும் முழுமையும் கிடைப்பது அருமையினும் அருமையே.

தமிழ்நாடு முழுவதும் தேடினும் இப்போழ்து எழுபதுபரிபாடல்களும் கிடைக்கமாட்டா. ௨௦, ௨௨, ௨௪, ௨௫ பாடல்கள் வரைதான் கிடைக்கும். ஒருவரிடம் ௯௦ பாடல்களும் மற்றொருவரிடம் ௭௦ பாடல்களும் இருப்பதாகக் கேள்வி ஒழிய அதனைப் பார்ப்பதற்கும் கூடாத காரியமாம்.

நாம் இதுவரைக்கும் பார்வையிட்ட பாக்கள் ௨௨ ம் குறைபாக்கள் நான்கும் ஆக ௨௬ பாக்களேயாம். அவற்றுள் முதற்பாக் கிடையவே கிடையாது. வாழ்த்துப்பாவும் குறையே. மேற்படி பாடல்களுக்குப் பழைய உரை ஒன்று இருக்கின்றது. அதனைப் பரிமேலழகர் செய்ததாச் சொல்லும் அகவற்பா ஒன்றுள்ளது. பரிமேலழகர் உரைக்கும் கொள்கைக்கும் சில மாறுபாடுகள் உள்ளனவாத் தோற்றுகின்றது. இப்போழ்து கிடைத்திருக்கின்ற பாக்களினால் பல அரிய செய்திகளும், கதை வேறுபாடுகளும், இசை யிலக்கணமும், வானநூல் ஆராய்ச்சியால் அறியக்கூடிய அகத்தியர் முதலிய மீன்களின்பெயர்களும், காமநூற் கருத்துகளும், முருகவேள் பிறப்பு முதலிய செய்திகளின் வேறுபாடுகளும், சோலைமலை, சீரலைவாய், பரங்குன்றம் முதலிய ஊர்களின் சிறப்புகள் முதலிய பலவுமாம்.

காமப் பகுதியே இதனுட் பல்லிடத்தும் வருவதனை,

(௧) நாம மருடலு நட்புந் தணப்புங்
காமமுங் கள்ளுங் கலந்துடன் பாராட்டித்
தாமமர் காதலொ டாடப் புணர்வித்தல்
பூமலி வையைக் கியல்பு.

(௨) ஆயத் தொருத்தி யவளை யமர்காம
மாயப்பொய் கூட்டி மயக்கி விலைக்கணிகை

பெண்மைப் பொதுமைப் பிணையிலி யைம்புலத்தைத்
துற்றுவ துற்றுந் துணை.

காமங் கணைந்தெழக் கண்ணின் களியெழ
வூர்மன்னு மஞ்சி யொளிப்பா ரவர்நிலை
கள்ளின் களியெழக் காத்தாங் கலரஞ்சி
யுள்ள முளையெழ வூக்கத்தா னுள்ளூட்
பரப்பி மதர்நடுக்கிப் பார்த்தலர் தூற்றக்
கரப்பார் களிமதரும் போன்ம்.

என வருவதினால் அறிக.

தமிழருள் மகளிர் ஆடவர் என்னும் இருபால்களும் சமப் பான்மையுள்ளார்கள் என்பதூஉம், அன்னார் தனித்து யானை, பல்லக்கு முதலியவைகள் மணம் முதலிய விசேடகாலங்களினன்றிச் சாதாரண காலத்தும் ஏறிச்சென்றனர்கள் என்பதனை,

அணிநிலை மாடத் தணிநின்று பாங்கர்
மடப்பிடி கண்டு வயக்கரி மாலுற்று
நடத்த நடவாது நிற்ப மடப்பிடிப்
பன்ன மனையாரோ டாயர் நடைக்கரிமேற்
சென்மென மாலுறப்பச் சென்றான் மாடத்துக்
கைபுனை இளர்வேங்கை காணிய வெருவுற்று
மைபுரை மடப்பிடி மடநல்லார் விதுப்புறச்
செய்தொழில்கொள் ளாதுமதி செத்துச் சிதைந்தாங்கு
கூர்ங்கை மடமாக் கொடுந்தோட்டி கைநிறுவி
நீங்கும் பதத்தா லுருமுப் பெயர்த்தந்து
வாங்கி முயங்கி வயப்பிடிகால் கோத்துச்
(சிறந்தார்களைய)
விதையுங் கயிறும் பிணையு மரியச்
சிதையுங் கலத்தைப் பயினாற் றிருத்துந்
திசையறி மீகானும் போன்ம்.

(தொடரும்)

திரு. சுப்பிரமணிய தேசிகர்,
காஞ்சீபுரம்.

COCOANUT BUTTER OR COCOTINE.

தேங்காய் வெண்ணெய்

அல்லது

கொக்கோட்டின்.

இது கை படாமல் யந்திரத்தின் உதவியினால் தேங்காயிலிருந்து செய்யப்பட்டது.

சமையலுக்கு உபயோகப் படுத்திக்கொண்டு வருகிற நெய், கொழுப்பு, வெண்ணெய் முதலிய பதார்த்தங்களுக்குப் பதிலாக, மிகவும் சுத்தமாயுள்ள கொக்கோட்டின் என்ற தேங்காய் வெண்ணெயை நன்றாய் உபயோகப்படுத்தலாம்.

1917, 1918-ல் நடந்த மதராஸ் கைத்தொழில் காட்சியில் கொக்கோட்டின் உயர்ந்த தன்மையுடையதென நற் சாக்ஷிப் பத்திரம் கொடுக்கப்பட்டது.

விலை முதலிய விபரங்களுக்கு அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பேஸ்ட் அண்டு கம்பெனி லிமிட்டெட்

மதராஸ் அண்டு புதுச்சேரி.

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பருய், ஆயுர்வேத

ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சன்னிதி, தஞ்சாவூர்.
தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக்காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

அதி உன்னதமான வாசனை திரவியங்கள்.

உயர்ந்த கோரோஜனை தோலா 1 க்கு ரூ. 2, உயர்ந்த குங்குமப்பூ தோலா 1 க்கு ரூ. 1.

உசிதமான அத்தர் தினுசுகள்:—ரோஜாப்பூ, மல்லிகைப்பூ, ஜாதிப்பூ, மகிழம்பூ, விளாமிச்சம்வேர், மருக்கொழுந்து, தாழம்பூ மருதணைப்பூ, சுவாக் முதலிய புஷ்பங்களின் முதல்தரமான அத்தர், வகைக்கு தோலா 1 க்கு ரூ. 1-8-0 வி. பி. சிலவு, பிரத்தியேகம்.

தாம்பூல விஹாரம்:—தாம்பூலம் தரிப்பவர்களுக்கு அதி அவசியமான மனக்களிப்புண்டாக்கக்கூடிய வாசனைக் கலவை விலை டப்பா 1-க்கு அணு 8, வி. பி. சிலவு 1 முதல் 12 டப்பாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

சோடாவாடர் பவுடர்:—இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்து கொண்டால் அதி உசிதமான சுயமான சோடாவாடர் உண்டாகும். ஒரு சீசாவிலுள்ள பவுடர் சுமார் 8 சீசா சோடாவாடர் செய்யப்போதுமானது. விலை சீசா 1-க்கு அணு 6, வி. பி. சிலவு 1 முதல் 4 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

லெமனேட் பவுடர்:—இச்சூரணத்தில் கொஞ்சம் எடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்தால் அதி உத்தமமான லெமனேட் தயாராகிவிடும். ஒரு சீசாவிலுள்ள சூர்ணம் சுமார் 8 பெரிய சீசா லெமனேட் செய்யப்போதுமானது. விலை சீசா 1-க்கு அணா 6, வி. பி. சிலவு 1 முதல் 4 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பன்னீர்:—இப்பன்னீர் ½ அவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது. இச்சிறு சீசாவிலுள்ள பன்னீரை 3 பெரிய சீசா வெந்நீருடன் கலந்தால் முதல்தரமான 3 சீசா பன்னீராகும். மேன்மையான பன்னீர் விலை சீசா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்,

தஞ்சாவூர் மசாலா பவுடர்:— ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்த வாசனை வஸ்துக்களைக்கொண்டு செய்யப்பட்ட மனோரம்மியமான கலவைபவுடர். சைவாளும் மாம்ஸதாரிகளும் குழம்பு, கறி, துகையல் முதலிய இன்னும் எல்லாவித சமையல் பதார்த்தங்களில் உபயோகித்தால் அவைகளின் ருசி மனதைக் கவரச்செய்யும். இதை உபயோகித்தால் நீடித்த அக்கினிமாந்தம் அருசி முதலியது குணப்பட்டு சாப்பாடு உட்கொள்ள ஆவலை உண்டாக்கும். இம்மசாலாவை சேர்த்துசெய்தசமையலின் மனோரம்மியமானவாசனை வீடுமுழுவதுமட்டுமல்ல, வெளியில் சுற்றுப்பக்கங்களிலும் பரவும். இதை பிராமணர்களும் மற்றவர்களும் யாதொரு தடையுமில்லாமலும் தங்கள் தங்கள் ஆசாரத்திற்கு ஹானியில்லாமலும் நிஸ்ஸந்தேகமாய் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8. 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப வி-பி-சிலவு அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY.

Ayurvedic Pharmacy,

Sri Venkatesa Perumal Koil Sannathy

TANJORE.